**ஒப்பந்த ID: _______**

## மிக முக்கியமான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் (MITC)

(விண்ணப்பதாரர் **ID)** மற்றும் மஹிந்திரா ரூரல் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட் ஆகியோருக்கிடையே ஒப்புக்கொள்ளப்பட்ட கடன் தொடர்பான முக்கிய விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் பின்வருமாறு:

| **குறிப்புகள்** | **விவரங்கள்** |
|---|---|
| **1. கடன்**<br>MRHFL -இன் கடன் தகுதி வரன்முறைகள் மற்றும் இதர விதிமுறைகளுக்கு உட்பட்டு சொத்தின் மொத்த விலையில் 90% வரை நிதியுதவியை நாங்கள் வழங்குகிறோம். | |
| ஒப்புதலளிக்கப்பட்ட கடன் தொகை (எண் மட்டும் எழுத்து இரண்டிலும் குறிப்பிடவும்) | இந்திய ரூபாய் --------------/- (ரூபாய் ---------------------------------மட்டும்) |
| | |
| **2. வட்டி** | |
| i) வட்டி வகை<br>• நடைமுறையிலுள்ள நிலையான வட்டி விகிதத்தின் அடிப்படையில் கடன் தொகை மீது நிலையான வட்டி வசூலிக்கப்படும்<br>• மாறுபடும் வட்டி – இந்த விருப்பத்தேர்வின் கீழ் விதிக்கப்படும் வட்டி விகிதம், MRHFL -இல் ரீடெயில் பிரைம் லெண்டிங் ரேட் உடன் இணைக்கப்படும். (RPLR) சந்தையில் நிலவும் வட்டி விகிதத்தின் அடிப்படையில் RPLR வட்டி விகிதம் அதிகரிக்கலாம் அல்லது குறையலாம். | |
| ii) வட்டி விகிதம் | _______% (PLR +/-) |
| iii) கால அவகாசம் / தள்ளுபடி | |
| iv) வட்டிவிகிதத்தில் மேற்கொள்ளப்படும் மாற்றங்களை தெரிவிக்கும் தொடர்பு வழிமுறைகள் | மாறும் வட்டி விகிதத்துடனான கடன்களுக்கு, MRHF PLR மாற்றமடைந்த மாதத்திற்கு அடுத்த மாதத்தின் முதல் நாளன்று வட்டி விகிதம் மாற்றியமைக்கப்படும் |
| v) Modes of communication of changes in interest rate | வட்டி விகிதங்களில் மேற்கொள்ளப்படும் எந்த ஒரு மாற்றம் குறித்த அறிவிப்புகளும் |

| | |
|---|---|
| | நிறுவனத்தின் www.mahindrahomefinance.com, கிளைகளில் உள்ள அறிவிப்புப் பலகையில் வெளியிடப்படும் மற்றும் வாடிக்கையாளருக்கு கடிதம் / மின்னஞ்சல் / குறுஞ்செய்தி அல்லது அம்மாதிரியான மாற்றங்கள் பொருத்தமான இதர தொடர்பு முறைகள் மூலம் அறிவிக்கப்படும். |
| 3. தவணை வகைகள்<br>உங்கள் சுய விவரங்கள், தொழில் மற்றும் இதர தகுதி வரன்முறைகளின் அடிப்படையில் கடன் தொகையின் அசல் மற்றும் வட்டி சேர்ந்த சமச்சீராக்கப்பட்ட தவணைத் தொகைகளை EMI/EQI/EHI முறைகள் மூலமாக மாதாந்திர, காலாண்டு அல்லது அரையாண்டு கால அளவுகளில் திருப்பிச் செலுத்தலாம். | |
| 4. கடன் காலம் (மாதங்களில்)<br>நிறுவனத்தின் கடன் மதிப்பீடு நடைமுறைகள் மற்றும் கொள்கைக்கு உட்பட்டு அதிகபட்சமாக 25 வருட காலஅளவுக்கு கடன்களை MRHFL வழங்குகிறது | |
| 5. கீழே குறிப்பிட்டவற்றிற்கு வீட்டு வசதி கடன்களை MRHFL வழங்குகிறது:<br>• குடியிருப்பு வீடுகள் கட்டுவதற்கு - உங்களுக்குச் சொந்தமான மனைகளில் உங்கள் கனவு இல்லத்தை சுயமாகக் கட்ட மஹிந்திரா ஹோம் பைனான்ஸ் நிதியுதவி வழங்கி மகிழ்ச்சியான அனுபவத்தை அளிக்கிறது<br>• குடியிருப்பு வீடுகளைக் கொள்முதல் செய்வதற்கு: கட்டப்பட்டு தயார் நிலையிலுள்ள அல்லது கட்டப்பட்டு கொண்டிருக்கும் வீடு / அல்லது அடுக்குமாடி வீட்டை விலைக்கு வாங்க எங்கள் சேவைகளைப் பயன்படுத்திக் கொள்ளவும்.<br>• தற்போது குடியிருக்கும் வீட்டின் பழுதுபார்ப்பு / சீரமைப்பு நடவடிக்கைகளுக்கு: நீங்கள் விரும்பும் வகையில் உங்கள் வீட்டை மறுசீரமைப்பு | |

| | |
|---|---|
| செய்யவும், அதற்கான நிதித் தேவைகளை நாங்கள் வழங்குகிறோம்<br>• தற்போது குடியிருக்கும் வீட்டின் விரிவாக்கம் – கூடுதலாக ஒரு அறையைக் கட்ட, திறந்த வெளியை மூட அல்லது உங்கள் வசதிக்காக கூடுதலாக ஒரு மேல்தளத்தை கட்டுவதற்கான எங்கள் வீட்டு வசதி விரிவாக்கக் கடன்கள்<br>• வீட்டு வசதியைத் தவிர இதர கடன் (நான் ஹவுசிங் லோன்) தற்போதுள்ள வாடிக்கையாளர்களுக்கு திருமணம், மருத்துவச் செலவுகள் மற்றும் கல்விக் கட்டணத்திற்கான கூடுதல் வீட்டு வசதி கடன். தற்போதுள்ள வாடிக்கையாளர்களுக்கு மருத்துவச் செலவு மற்றும் கல்விக் கட்டணங்களுக்கு சட்டப்பூர்வமான அவர்களின் தேவைகளுக்கு சொத்துக்களுக்கு ஈடான கடன் | |
| **6. கட்டணங்கள் மற்றும் இதர செலவுகள்** | |
| செயல்பாட்டுக் கட்டணம் | குறைந்தபட்சம் ரூ. 1000 -க்கு உட்பட்டு மேலே குறிப்பிட்டபடி வழங்கப்பட்ட கடன் தொகையில் ____ % கடன் விண்ணப்பம் நிராகரிக்கப்படும் பட்சத்தில் திருப்பித் தரப்படாது. |
| ஆவணப்படுத்தல் கட்டணம் | INR 1500/- |
| பகுதி செலுத்துதல் / முன் செலுத்துதல் கட்டணம் | தனிநபர்களுக்கு வணிக நோக்கங்களுக்காக வழங்கப்பட்ட மாறும் வட்டி விகிதக் கடன்களுக்கு - 4%.<br>நிலையான வட்டி விகிதக் வீட்டு வசதி கடன்களுக்கு \'சொந்த ஆதாரம்' அல்லாத வேறு வழிகளில் திருப்பிச் செலுத்தப்படும்போது - 3%.<br><br>முழு அல்லது பகுதி அசல் நிலுவை தொகையின் அடிப்படையில் முன்-செலுத்தப்படும் தொகைக்கு கட்டணம் விதிக்கப்படும். |
| இன்ஸ்ட்ரூமென்ட் பவுன்சிங் கட்டணங்கள் | INR 500/- |
| ஆவணங்களை மீட்டெடுத்தல் கட்டணம் | INR 500/- |

| | |
|---|---|
| காசோலை ரத்து மற்றும் திரும்ப வழங்கப்படுவதற்கான கட்டணம் | INR 500/- |
| டிமாண்ட் டிராஃப்ட் / பே ஆர்டர் வழங்கல் கட்டணம் | INR 150/- |
| கடன் தீர்வு அட்டவணை மீண்டும் வழங்கப்படுதல் | INR 100/- |
| கணக்கு அறிக்கை மீண்டும் வழங்கப்படுதல் | INR 250/- |
| கடன் முன்முடிப்பு தொகை செலுத்தல் இறுதி அறிக்கை கட்டணங்கள் | INR 250/- |
| தடையில்லா சான்றிதழ் மறு படிவத்திற்கான கட்டணம் | INR 100/- |
| கடன் ஒப்புதல் / வழங்கல் நிராகரிக்கப்பட்டால் திருப்பி வழங்கப்படும் கட்டணம் | மேலே குறிப்பிடப்பட்டிருக்கும் செயல்பாட்டு கட்டணங்கள் |
| மாறுபடக்கூடிய வட்டி விகிதம் மற்றும் நிலையான வட்டிவிகிதம் இவற்றில் ஒன்றினிலிருந்து மற்றொன்றுக்கு மாறுவதற்கான கட்டணம் | திருப்பிச்செலுத்த வேண்டிய அசல் கடன் தொகையில் (POS) 3% அல்லது ரூ.10,000 இவற்றில் எது அதிகமோ அந்த தொகை. கடன் தொகை முழுமையாக வழங்கப்பட்டு 3 வருடங்கள் பூர்த்தியடைந்த பின்னரே இந்த வசதியைப் பயன்படுத்த முடியும். கடன் வழங்கப்பட்ட காலத்தில் அதிகபட்சமாக இரண்டுமுறை மட்டுமே இந்த வசதியயை பயன்படுத்த முடியும். |
| காலம் தாழ்த்தி தொகை செலுத்தப்படுவதற்கான அபராத தொகை | காலாவதியான தவணையில் மாதத்திற்கு 2% |
| **7. கடனுக்கான பிணை**<br>MRHFL -இல் அடமானம் வைக்கப்பட்ட சொத்துக்கு எதிராக பிணை உருவாக்கப்படும்.<br>செயல்படுத்துதலுக்கான MRHFL -இன் விருப்பத்தின் கீழான அடிப்படையில் உத்தரவாதமளிப்பவர்கள் கேட்டுக் கொள்ளப்படுவார்கள்.<br>MRHFL -இன் விருப்பத்தின் கீழான அடிப்படையில் இதர துணைப் பிணையங்கள் பெறப்படும். | |
| சொத்தின் அமைவிட முகவரி | |
| உத்தரவாதமளிப்பவரின் முகவரி | |
| இதர பிணை (ஏதாவது இருப்பின்) | |

**8. கடன் பெறுபவர்களுக்கான / சொத்திற்கான காப்பீடு:**
கடன் பெறுபவர்கள் கடன் காலம் முழுவதும் செயல்பாட்டில் இருக்கும் வகையில் ஒரு முறையான காப்பீட்டுத் திட்டத்தின் மூலம் கீழ்க்கண்ட ஆபத்துகளுக்கான காப்பீட்டை பெற வேண்டும் என்று MRHFL எப்போதுமே பரிந்துரைக்கிறது.

- முக்கிய நபருக்கான ஆயுள் காப்பீடு
- நிதியுதவி வழங்கப்பட்ட வீட்டுச் சொத்துக்கு எதிரான தீ விபத்துக் காப்பீடு
    - சொத்தின் விலைக்குக் குறையாத அளவிலான ஒரு தொகை
    - கடன் காலத்துக்கு சமமான ஒரு குறைந்தபட்ச கால அளவிற்கு.

கடன் பெறுபவர்கள் காப்பீட்டுத் திட்டங்களை அவர்களே ஏற்பாடு செய்து கொள்ளலாம் அல்லது கடன் பெறுபவர்களின் வசதிக்கேற்ப மானியத்துடன் கூடிய விகிதத்தில் காப்பீடு ஏற்பாடு செய்ய MRHFL வசம் வேண்டுகோள் விடுக்கலாம்

கடன் பெறுபவர் **MRHFL** நிறுவனத்தின் மூலம் காப்பீட்டை பெறத் தேர்ந்தெடுத்திருந்தால், காப்பீட்டு நிறுவனம் அதன் சொந்த விருப்பப்படி பரிந்துரைத்த காப்பீட்டு பாலிசி **/** கவர் வழங்குவதுடன் கூடுதலாக வாடிக்கையாளர் சமர்ப்பிக்க வேண்டிய ஆவணங்கள்/தகவல்கள்/ மேற்கொள்ளப்படும் மருத்துவப் பரிசோதனைகள் போன்ற பல்வேறு சமர்ப்பித்தல்களுக்கு உட்பட்டது என்பதைக் கடன் பெறுபவர் ஒப்புக்கொண்டு உறுதிப்படுத்துகிறார். பாலிசி வெளியிடப்பட்ட தேதியிலிருந்து மட்டுமே கவரேஜ் தொடங்கும் என்பதையும் கடன் பெறுபவர் அறிந்திருக்கிறார்**.** காப்பீட்டு நிறுவனம் பாலிசியை வழங்குவதற்குத் தேவையான அனைத்து செயல்முறைகளையும் உரிய நேரத்தில் கடன் பெறுபவர் மேற்கொள்ள வேண்டும்**.** மேற்கூறியவற்றைக் கடன் பெறுபவர் கடைப்பிடிக்கத் தவறும்பட்சத்தில்**,** அத்தகைய இழப்பிற்கு அல்லது **MRHFL** நிறுவனத்தால் ஏற்படாத மற்ற காரணங்களினால் ஏற்படும் எந்த இழப்பிற்கும் **MRHFL** நிறுவனத்தைப் பொறுப்பாக்க மாட்டோம் என்று கடன் பெறுபவர் உறுதியளிக்கிறார்.

**9. கடன் வழங்கப்படுவதற்கான நிபந்தனைகள்:** கடன் அனுமதிக் கடிதம் மற்றும் கடன் ஒப்பந்தம் வழங்கப்படுவதற்கு முன்பாக வரையறுக்கப்பட்ட நிபந்தனைகளின் படி கடன் தொகை வழங்கப்படும்.

**10. கடன் தொகை மற்றும் வட்டி திரும்பச்செலுத்துதல்:**

- கடன் வழங்கலின் முதல் தவணையை நீங்கள் பெற்றுக்கொண்ட பிறகான நாளிலிருந்து மற்றும் உங்கள் சமச்சீரான தவணைத் தொகையைச் செலுத்தத் துவங்கும் நாளுக்கும் இடைப்பட்ட காலத்திற்கான  வட்டி செலுத்தப்பட வேண்டும்.
- EMI கணக்கிடப்பட்ட அதே விகிதத்தில் EMI -க்கு முன் செலுத்தும் வட்டி வசூலிக்கப்படும் மற்றும் அது வழங்கப்பட தொகை மீது ஒவ்வொரு மாதமும் செலுத்தப்பட வேண்டும்.
- உங்களுக்கு வழங்க அனுமதிக்கப்பட்ட கடன் தொகை இறுதியில் முழுவதுமாக வழங்கி முடிக்கப்பட்ட மாதத்தை தொடர்ந்து வரும் அடுத்த மாதத்திலிருந்து கடன் தொகை திருப்பிச் செலுத்தப்பட வேண்டும். கடன் தொகையை ACH மூலமாக அல்லது எந்த ஒரு MRHFL அலுவலகத்திலும் நேரடியாக ரொக்கம் / காசோலை / டிமாண்ட் டிராஃப்ட் மூலமாக திருப்பிச் செலுத்தலாம். காசோலை /ACH மூலமாக கடன் தொகை செலுத்தப்படுவதற்கு MRHFL அதன் தனிப்பட்ட சொந்த விருப்பத்தின் கீழ் தனித்தனியான நிலைகளின் அடிப்படையில் வகுத்துரைக்கும். மேலும் கடன் தொகை திருப்பிச் செலுத்த முன் தேதியிட்ட காசோலைகளையும் MRHFL பெற்றுக்கொள்ளும்.
- வட்டி விகிதம் மற்றும் தவணைத் தொகைகளில் மேற்கொள்ளப்படும் எந்த ஒரு மாற்றங்கள் குறித்தும் வாடிக்கையாளருக்கு கடிதம்/மின்னஞ்சல்/குறுஞ்செய்தி அல்லது அம்மாதிரியான மாற்றங்களைத் தெரிவிக்க பொருத்தமான இதர தொடர்பு முறைகள் மூலம் முன்கூட்டியே அறிவிக்கப்படும்.

| | |
|---|---|
| தவணைகளுக்கு இடையேயான கால அளவு | |
| தவணைகளின் மொத்த எண்ணிக்கை | |
| தவணைத் தொகை | |
| செலுத்துவதற்கான இறுதி நாள் | |

11. **செலுத்தத் தவறிய நிலுவைத் தொகையை வசூல் செய்யும் நடைமுறைகள் பற்றிய குறிப்பு**:

EMI -க்கு முன்பான வட்டி / தவணைகளை உரிய தேதிகளில் செலுத்தத் தவறி செலுத்தப்படாமல் நிலுவையில் இருந்தால் பின்வருபவற்றை செயல்படுத்தலாம்:

- MRHFL அலுவலர்கள் தொலைபேசி அழைப்பு மற்றும் கள வருகைகளை மேற்கொள்தல்.
- வாடிக்கையாளர்களுக்கு நினைவூட்டு குறுஞ்செய்தி/ கடிதங்கள் அனுப்புதல்
- வசூல் குழுவுடன் சேர்ந்து தனிப்பட்ட வருகைகளை வாடிக்கையாளர்களின் வீட்டில் / வேறு இதர தொடர்பு அமைவிடங்களில் மேற்கொள்ளலாம்.
- சட்டப்பூர்வமான நடவடிக்கைகள் தொடரப்பட வேண்டும்.

- கடன் ஒப்பந்தத்தில் குறிப்பிட்டுள்ளதற்கு இணங்காது தவணை தவறுதல் அல்லது எந்த ஒரு மீறல்களும் நிகழுமானால், வழங்கப்பட்ட கடன் தொகையை மீளப் பெறுவதற்கு அல்லது பிணையை செயல்படுத்துவதற்கு அல்லது சட்டப்பூர்வமான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு மற்றும் கடன் தொகை மீட்டெடுப்பதற்குத் தேவையான அம்மாதிரியான அனைத்து நடைமுறைகள் / நடவடிக்கைகளையும் மேற்கொள்ளும் உரிமையை MRHFL தக்க வைத்துள்ளது.

**12. நிலுவையிலுள்ள இருப்புத் தொகைக்கான வருடாந்திர அறிக்கை வழங்கப்படும் நாள்**

வாடிக்கையாளரின் வேண்டுகோளுக்கு இணங்க அவருக்கு கணக்கு அறிக்கை வழங்கப்படும் மற்றும் செலுத்த வேண்டி நிலுவையிலுள்ள தொகை குறித்து வாடிக்கையாளருக்குக் குறுஞ்செய்தி மூலம் தகவல் அளிக்கப்படும்.

**13. வாடிக்கையாளர் சேவைகள்:**

a. அலுவலக வருகை நேரம்9:30 மணி முதல் மாலை 5:30 மணி வரை.
பொது விடுமுறை நாட்கள், மாதத்தின் 3 ஆவது சனிக்கிழமை மற்றும் அனைத்து ஞாயிற்றுக் கிழமைகளும் விடுமுறை நாட்கள்.

b. வாடிக்கையாளர் சேவை சம்பந்தமாக தொடர்பு கொள்ள வேண்டிய நபரின் விவரம்:
குழுத் தலைவர் அல்லது கடன் வழங்கல் அதிகாரி

c பல்வேறு சேவைகளுக்கான காலஅளவு :-

| **சேவை வகை** | **சேவைக்கான கால அளவு** |
|---|---|
| கடன் கணக்கு அறிக்கை | விண்ணப்பித்த நாளில் இருந்து 3 வேலை நாட்கள் |
| கடன் தீர்வு அட்டவணை | விண்ணப்பித்த நாளில் இருந்து 3 வேலை நாட்கள் |
| வருமான வரி சான்றிதழ் | விண்ணப்பித்த நாளில் இருந்து 3 வேலை நாட்கள் |
| சொத்து அசல் ஆவணங்களின் பட்டியல் | விண்ணப்பித்த மற்றும் தேவையான கட்டணங்கள் செலுத்தப்பட்ட நாளில் இருந்து 15 வேலை நாட்கள் |
| சொத்து அசல் ஆவணங்களின் புகைப்பட நகல் | விண்ணப்பித்த மற்றும் தேவையான கட்டணங்கள் செலுத்தப்பட்ட நாளில் இருந்து 15 வேலை நாட்கள் |
| கடன் முன்முடிப்பு அறிக்கை | விண்ணப்பித்த மற்றும் தேவையான கட்டணங்கள் செலுத்தப்பட்ட நாளில் இருந்து 15 வேலை நாட்கள் |
| கடன் திருப்பி செலுத்தப்பட்ட பிறகு NOC வழங்கல் | முழுமையாக திருப்பி செலுத்திய பிறகு / கடன் கணக்கு தீர்க்கப்பட்ட பிறகு 30 நாட்கள் |
| ஆவணங்கள் திருப்பித் தரப்படுதல் (செலுத்தப்பட்ட தொகை வரவு வைக்கப்பட்ட பிறகு மற்றும் கடன் கணக்கு முடித்துவைக்கப்பட்ட பிறகு) | முழுமையாக திருப்பி செலுத்திய பிறகு / கடன் கணக்கு தீர்க்கப்பட்ட பிறகு 30 நாட்கள் |

**14. குறை தீர்க்கும் நடைமுறைகள்**:

| | |
|---|---|
| புகார்கள் தாக்கல் செய்யப்படுவதற்கான தொடர்புத் தகவல்கள்.<br>எங்கள் வாடிக்கையாளர் சேவை குழுவிடம் பேசவும் | எந்த ஒரு வகையான புகார்களும் கட்டணமில்லா தொலைபேசி எண் 1800 233 533 மூலம் அழைத்து அளிக்கப்படலாம்<br><br>உங்களுக்கு அருகாமையிலுள்ள MRHFL கிளையில் உங்கள் புகார்களை பதிவு |

| | |
|---|---|
| | செய்யவும் மற்றும் தொடர் நடவடிக்கைகளுக்காக புகாரின் டிக்கெட் ID -ஐ கேட்டுப் பெறவும் |
| உங்கள் புகார் அளிக்கப்பட்ட தினத்திலிருந்து 21 நாட்களில் எந்த ஒரு தகவலையும் நீங்கள் பெறவில்லை என்றால் அல்லது உங்களுக்கு வழங்கப்பட்ட தீர்வு குறித்து உங்களுக்கு திருப்தி இல்லை என்றால், கார்ப்பரேட் அலுவலகத்தில் உள்ள “குறை தீர்க்கும் அதிகாரியை” அணுகவும். | குறை தீர்க்கும் அதிகாரி<br>மஹிந்திரா ரூரல் ஹவுசிங் ஃபைனான்ஸ் லிமிடெட்,<br>யூனிட் எண். 203, அமிதி கட்டிடம், பிரமல் அகஸ்தியா கார்ப்பரேட் பார்க்,<br>தீயணைப்பு நிலையம் எதிரில்,<br>கமானி ஜன்ஷன், L.B.S மெயின் ரோடு, குர்லா (மேற்கு), மும்பை - 400 070<br>தொலைபேசி: (022)-6292 9800 |
| வழங்கப்பட்ட தீர்வு குறித்து உங்களுக்கு திருப்தியில்லையென்றால் நீங்கள் உடனடியாக ஹவுசிங் பைனான்ஸ் நிறுவனங்களின் ஒழுங்கு முறை ஆணையமான நேஷனல் ஹவுசிங் பேங்க் -ஐக் கீழே குறிப்பிட்ட முகவரியில் அணுகி அல்லது NHB வலைத்தளத்தை பயன்படுத்தி ஆன்லைனில் உங்கள் புகாரை சமர்ப்பித்து உங்கள் புகாருக்கான தீர்வை பெறலாம். | நேஷனல் ஹவுசிங் பேங்க்,<br>ஒழுங்குமுறை மற்றும் மேற்பார்வை துறை, (புகார் தீர்வு பிரிவு),<br>4வது தளம், கோர்-5A, இந்தியா ஹேபிடட் மையம், லோதி சாலை, புது தில்லி - 110 003.<br><br>வலைத்தளம் : https://grids.nhbonline.org.in/<br>https://nhb.org.in |

**கடன் தொடர்பான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளின் விரிவான தகவல்களுக்கு நிறைவேற்றப்பட்ட / நிறைவேற்றப்படவிருக்கிற கடன் மற்றும் இதர ஆவணங்களைக் காணவும் மற்றும் அதனை சார்ந்திருக்கவும் இதன் தரப்பினர்கள் இதன் மூலம் ஒப்புக்கொள்கிறார்கள்.**

மேலே கூறப்பட்ட விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் இதன் கடன் பெறுபவரால் (பெறுபவர்களால்) வாசிக்கப்பட்டு / நிறுவனத்தின் ஸ்ரீ /திருமதி/செல்வி

______________________________________________________________ அவர்களால் கடன் பெறுபவர்களுக்கு வாசித்துச் சொல்லப்பட்டு அது கடன் பெறுபவரால் (பெறுபவர்களால்) புரிந்து கொள்ளப்பட்டது.

கடன் பெறுபவரின் (பெறுபவர்களின்) கையொப்பம் அல்லது இடது கை பெருவிரல் முத்திரை.

**கடன் வழங்குநரின் அதிகாரம் பெற்ற நபரின் கையொப்பம்**

குறிப்பு : MITC -இன் போலி நகல் இதன் கடன் பெறுபவருக்கு (பெறுபவர்களுக்கு) வழங்கப்பட வேண்டும்.